# பத்திரிக்கை செய்தி

பொது சுகாதாரம், மாவட்ட நலச்சங்கம், நாகப்பட்டினம், தேசிய சுகாதார குழுமம் மூலம் வட்டார கணக்கு உதவியாளர், நகர்ப்புற துணை செவிலியர் மற்றும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் ஆகிய பணியிடங்கள் நிரப்ப உள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**திறமையின் அடிப்படையில் அடுத்த 11 மாதங்களுக்கு புதுப்பிக்கப்படும்**

| வ. எண் | பணியின் விபரம் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பணிக்கான தகுதி | ஊதிய விபரம் (தொகுப்பூதியம்) (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1. | துணை செவிலியர் | 8 | I. 15.11.2012-க்கு முன் தேர்ச்சி பெற்றவர்கள் SSLC தேர்ச்சியுடன் 18 மாத துணை செவிலியர் பயிற்சி அல்லது பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சி முடித்திருக்க வேண்டும்.<br>II. 15.11.2012-க்கு பின் தேர்ச்சி பெற்றவர்கள் 12-ம் வகுப்பு தேர்ச்சியுடன் 2 ஆண்டு துணை செவிலியர் பயிற்சி அல்லது பல்நோக்கு சுகாதாரப்பணியாளர்(பெண்) பயிற்சி முடித்திருக்க வேண்டும்.<br>III. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதியப்பெற்ற சான்று வைத்திருக்க வேண்டும்.<br>IV. பணிபுரிய முழு உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் | (தேசிய நலகுழும வழிகாட்டு நெறிமுறைகளின் படி) |
| 2 | வட்டார கணக்கு உதவியாளர் | 1 | I. இளங்கலை வணிகவியல் பட்டம் முடித்திருக்க வேண்டும்.<br>II. Tally பயிற்சி முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். தமிழ் ஆங்கிலம் தட்டச்சு கணிணி பயிற்சி பெற்றிருக்கவேண்டும். | |
| 3. | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் | 2 | எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். | |

<u>நிபந்தனைகள்:</u>

1. இந்த பதவி முற்றிலும் தற்காலிகமானது.
2. எந்தவொரு காலத்திலும் பணிநிரந்தரம் செய்யப்படமாட்டாது.
3. பணியில் சேருவதற்கான சுயவிருப்ப ஒப்புதல் கடிதம் அளிக்கப்பட வேண்டும்.

தகுதியுடை விண்ணப்பதாரர்கள், கல்வி மற்றும் தொழில்நுட்ப தகுதிச்சான்று, சாதிச்சான்று ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்கள், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் ரூ.10/-க்கான தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவருடன் பூர்த்தி செய்து கையொப்பமிட்ட விண்ணப்பங்களை 25.11.2022 மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்

கடிதத்தின் உறையின் மேல் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு: தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, நேர்காணல் கடிதம் அனுப்பப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி (நேரிலோ/தபால் மூலமாக)

<u>முகவரி:</u>

**பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்தத்துறை**
**துணை இயக்குநர்**
**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம்**
மாவட்ட ஆட்சியரகம் முதல் நுழைவாயில்,
நாகப்பட்டினம்-611003 தொடர்புக்கு- 04365-253036

நிர்வாக செயலர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
மாவட்ட நலவாழ்வு சங்கம், நாகப்பட்டினம்.

தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகப்பட்டினம்.